மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நாம் தமிழகத்தில் தமிழ் எழுத்துச் சீர்திருத்த முறையைக் கொண்டு வந்த பிறகு சிங்கப்பூரிலும் அதை ஏற்றுக்கொண்டு, அவர்கள் அதற்காக ஆணையே பிறப்பித்து அங்கே முழுமையாக அது நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால் இங்கே அரசு தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்த பின்னர், நூல்கள் வெளியிடுகிறவர்களிடமிருந்தும் பத்திரிகையாளர்களிடமிருந்தும் நமக்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. ஒரு அறிவியல் ஆதாரத்தின் அடிப்படையில் விஞ்ஞான ரீதியாக மொழி வளர்ச்சிக்கும், அதன் மூலமாக மக்களின் நலனுக்கும் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படும் போது, மக்களுக்குச் சேவை செய்வதாகச் சொல்லிக்கொள்கிற இப்படிப்பட்டவர்கள் அதற்கு ஒத்துழைப்புத் தருவது என்பது மிகவும் வேண்டத்தக்கதாகும். எனவே அப்படிப்பட்டவர்கள் மீண்டும் இதைப்பற்றிச் சிந்தித்து இந்த நல்ல முயற்சிக்கு ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நூலகங்களில் எழுத்துச் சீர்திருத்தத்தை மேற்கொள்ளாத நூல்களை வாங்குவதை நிறுத்துவது என்பது நம்மால் செய்ய முடிந்த காரியம்தான் என்றாலும், அதற்கு முன்னர் அனைவருக்கும் நான் இந்த வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன்.

குடும்ப ஓய்வு ஊதியம்.

* 107. வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1964-க்குப் பின்னும், 1—4—1970-க்கு முன்னும் ஓய்வு பெற்றவர்களின் குடும்ப ஓய்வு ஊதியம் வழங்குவது தொடர்பாக, கல்வித்துறையால் 5—1—1978-ல் வெளியிடப்பட்ட அரசு ஆணை எண் 30-ஐ அமுல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) இதுபற்றி மாநில கணக்காயர் (Accountant-General) அலுவலகத்திலிருந்து அரசிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதா ?

(உ) ஓய்வு ஊதியம் பெறுவதற்கு காலதாமதம் ஆவது பற்றி முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(எ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) விலிருந்து (எ) வரை கல்வித் துறையால் 5—1—1978-ல் வெளியிடப்பட்ட அரசாணை எண் 30ஐ அமுல் படுத்துவது தொடர்பாக மாநில கணக்காயர் அலுவலகத்திலிருந்து சில விளக்கங்கள் கோரப்பட்டன. இவ்விளக்கங்கள் கல்வித் துறையால் 25—5—1982-ல் வெளியிடப்பட்ட அரசாணை எண் 1012-ல் அளிக்கப்பட்டன. இதன் காரணமாக, கல்வித் துறை அரசாணை எண் 30ஐ அமுல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், இதுபற்றி அரசுக்கு முறையீடு ஏதும் வரவில்லை.

Pay Scales of Wakf Board Employees.

*108. *Q.*—Tairu S J. SADIQ PASHA: Will the Hon. the Minister for Irrigation be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to revise the scales of pay of the employees of the Wakf Board; and

(*b*) the annual financial commitment of the Wakf Board for the employees' salary?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் ஊதிய விகிதங்கள் தமிழ்நாடு வக்ஃபு வாரியப் பணியாளர்களுக்கும் அனுமதிக்கப்படுகிறது. எனவே அவர்களது சம்பள விகிதங்களைத் திருத்தியமைக்கும் அவசியம் தற்போது எழவில்லை.

(இ) 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 8.71 இலட்சம்.

(முற்பகல் 10-10)

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசு ஊழியர்களுக்கு வழங்கக்கூடிய ஊதிய விகிதத்தை அவர்களுக்கும் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுப்பதைப் போல, ஓய்வு பெற்றால் பத்தாயிரம் ரூபாய் உதவித் தொகை மற்றும் பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால் கொடுக்கும் பத்தாயிரம் ரூபாய் ஆகியவை கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அவற்றைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?